# கோறளைப்பற்று பிரதேச சபை

## 56வது சபை அமர்வு (06.10.2022)

## கூட்டறிக்கை

**காலம்:** **06**.10.2022 – வியாழக் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 56ஆவது சபை அமர்வு, 06.10.2022 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

01. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் ~ கௌரவ தவிசாளர்
02. திரு. தர்மலிங்கம் யசோதரன் ~ கௌரவ உப தவிசாளர்
03. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ~ கௌரவ உறுப்பினர்
04. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் ~ கௌரவ உறுப்பினர்
05. திரு. காளிக்குட்டி நடராசா ~ கௌரவ உறுப்பினர்
06. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் ~ கௌரவ உறுப்பினர்
07. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் ~ கௌரவ உறுப்பினர்
08. திரு. கனகரெட்ணம் கமலநேசன் ~ கௌரவ உறுப்பினர்
09. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் ~ கௌரவ உறுப்பினர்
10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் ~ கௌரவ உறுப்பினர
11. ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் ~ கௌரவ உறுப்பினர்
12. திரு. கதிரவேலு நல்லரெட்ணம் ~ கௌரவ உறுப்பினர்
13. திரு. குணராசா குணசேகரன் ~ கௌரவ உறுப்பினர
14. திரு.கந்தசாமி பகீரதன் ~ கௌரவ உறுப்பினர
15. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் ~ கௌரவ உறுப்பினர்
16. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ~ கௌரவ உறுப்பினர
17. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ~ கௌரவ உறுப்பினர்
18. திருமதி. பொன்னையா கலைவாணி ~ கௌரவ உறுப்பினர்
19. ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா ~ கௌரவ உறுப்பினர்
20. திரு. சுந்தரம் சுதர்சன் ~ கௌரவ உறுப்ப
21. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் ~ கௌரவ உறுப்பினர்
22. திரு. சண்முகம் கதிரவன் ~ கௌரவ உறுப்பினர்

56ஆவது சபை அமர்வானது கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில் சபா மண்டபத்தில் 06.10.2022 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பமானது

அதனைத்தொடர்ந்து 56 ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளார், கௌரவ உறுப்பினர்கள், மற்றும் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

இன்றைய நாள் உலக ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுவதினால், அந்தவகையில் கௌரவ உறுப்பினர்களாக இருக்கின்ற ஆசியரியர்களுக்கு ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் எமது சபையின் நாளாந்த நடவடிக்கைகள் வழமைபோல் இடம் பெற்று வந்த நிலையில் கடந்த இரு வாரங்களில் எமது சபைக்குட்பட்ட குகனேசன் கலாசார மண்டபத்தின் நீர் பம்பி மற்றும் வளர்மதி முன்பள்ளியில் வேல்ட் விசன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நீர் பம்பி மற்றும் அங்கு பொருத்தப்பட்டுள்ள மூன்று மின் விசிரிகள் என்பன திருடப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.

அத்துடன் கடந்த வாரம் 45 வயதுக்குட்பட்ட கௌரவ உறுப்பினர்களுக்கான முரண்பாடு தொடர்பான செயலமர்வு இடம்பெற்றதாகவும் இவ் செயலமர்வில் மூன்று உறுப்பினர்கள் மாத்திரம் கலந்து கொண்டதாகவும் ஆனால் சகல 45 வயதிற்குட்பட்ட உறுப்பினர் அனைவருக்கும் அறியப்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் குடும்பிமலை குமரன் ஆலய நிருவாகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்று அக்கலந்துரையாடலில் கௌரவ உறுப்பினர்கள் ஆலயத்திற்கான நிதி உதவி செய்வதாக கூறப்பட்டிருந்ததாகவும் அவ்வாறு நிதி வழங்க விரும்பிய கௌரவ உறுப்பினர்கள் குறித்த நிதியினை கௌரவ உறுப்பினர் கந்தசாமி பகீரதன் அவர்களிடம் வழங்குமாறும், அந்திதியினை கொண்டு ஆலயத்திற்கான நீர் வசதியினை ஏற்படுத்தி கொள்ளலாம் என ஆலய நிருவாகிகள் கூறியுள்ளனர்.

எமது சபைக்கு சொந்தமான குகனேசன் கலாசார மண்டபத்தின் குறைபாடுகள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் இதனை நிவர்த்தி செய்யும் முகமாக கடந்த கால சபை அமர்வுகளில் மண்டப திருத்தம் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையை பெற்று மண்டபத்தின் மின்னிணைப்பு, மின்விசிரி, மலசல கூடங்கள் என்பவற்றின் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

அதேபோல் வரவுசெலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வாசிப்பு மாத நிகழ்வினை நடாத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அத்துடன் முதியோர் , சிறுவர் தின நிகழ்வுகளும் நடாத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எவ்வாறான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை கௌரவ உறுப்பினர்கள் ஆலோசனை வழங்குமாறு கேட்டுக்கொண்டதுடன் இதற்கான நிகழ்வினை இம்மாதத்திற்குள் நடாத்தி முடிக்க வேண்டும் எனவும் தெரியப்படுத்தினார்.

அத்துடன் கௌரவ உறுப்பினர் சாமித்தம்பி மணிசேகர் அவர்கள் சுகயீன விடுமுறை அறிவித்துள்ளதாகவும் அவ்விடுமுறையினை சக கௌரவ உறுப்பினர்கள் அங்கிகரித்து தருமாறு கேட்டுக்கொண்டு தனது தலைமையுரையினை நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள் தங்களது தலைமையுரையில் கலாசார மண்டபம் மற்றும் முன்பள்ளி என்பவற்றில் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்திருந்தீர்கள் இவ் இடங்களுக்கு காவலாளிகள் இல்லையா என கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் ஆளணி பற்றாக்குறை காரணமாக பேத்தாழை பொது நூலகத்தில் கடமை புரியும் காவலாளிகளே கலாச்சார மண்டபத்தினையும் கவனித்து வருவதாகவும் தற்பொழுது முன்பள்ளியிலும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பதனால் இவ்விடங்களுக்கும் காவலாளிகள் நியமிப்பது தொடர்பாக கவனம் செலுத்தவேண்டியுள்ளது என பதிலளித்தார்.

அதனை தொடர்ந்தது உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள் வம்மியடி வீதிக்கு வடக்குப்பக்கமாக 1கிலோமீற்றருக்கு குறைந்த ஒரு மணல் ஒழுங்கை காணப்படுவதாகவும் இவ்வொழுங்கையினை 46ற்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துவதாகவும், இதனை தாங்கள் ஒருமுறை சபையினால் களவிஜயம் மேற்கொண்டு பார்வையிடுமாறும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை கௌரவ உப தவிசாளர் திரு.தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன், கூட்டக்குறிப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவாக வாக்கெடுப்பு இடம்பெறும்போது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. சுந்தரம் சுதர்சன் , திரு. சண்முகம் கதிரவன் அகிய 09 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன், எதிராக திரு.கதிரவேலு நல்லரெட்ணம், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. குணராசா குணசேகரன், திரு.கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணப்பிள்ளை சேயோன், ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா, ஜனாப் காமீது லெவ்வை இப்றாஹீம், ஆகிய 07 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் 03 மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதுடன் கௌரவ உறுப்பினரான ஜனாப் முஹம்மது புகாரி முஹம்மது வாசுதீன், ஜனாப் சேகு இஸ்மயில் முஹம்மது இம்தியாஸ், திருமதி பொன்னையா கலைவாணி, திருமதி பஞ்சாட்சரம் லெட்சுமி, திருமதி கந்தசாமி றஞ்சிதமலர் ஆகிய 05 கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடைபெறும்போது அவையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

## கணக்கறிக்கை சமர்ப்பித்தல்

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்தமாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது

## தீர்மானங்களை நிறைவேற்றல்

### 1. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/56/OCTOBER/01/2022

- **கோறளைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கு இடருதவிக்கடன் வழங்குவதற்கான சபை அங்கீகாரம் பெறல்**

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் இடருதவிக்கடனினை இற்றைவரை பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு முன்னுரிமையடிப்படையில் வழங்க வேண்டுமென தனது கருத்தினை பதிவுசெய்தார்.

சபையின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு இடருதவிக்கடனை இற்றைவரை பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு வழங்குவதற்கு கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/56/OCTOBER /01/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ஆகியோர் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

### 02. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/56/OCTOBER/02/2022

### வாசிப்பு மாதத்தை சபை நிதி மூலம் அனுஸ்டிப்பதற்கான சபை அங்கீகாரம் பெறல்

மேற்படி தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் திரு. சுந்தரம் சுதர்சன் அவர்கள் முன்மொழிந்ததுடன் இதனை கௌரவ உறுப்பினர் திரு.சிற்றம்பலம் கிருபாகரன் அவர்கள் வழிமொழிந்ததனை தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித் அவர்களும் கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்களுடன் கௌரவ உறுப்பினர்களான திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு.காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு.கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. குணராசா குணசேகரன், திரு. கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன், திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ,திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ,திருமதி. பொன்னையா கலைவாணி , ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா, திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன், ஆகிய 19 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன் ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அவர்கள் நடுநிலை வகித்தார் அதனைத் தொடர்ந்து

**KPPS/M.MEETING/56/OCTOBER/02/2022** இலக்க தீர்மானமானது 19 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ஆகியோர் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

## 03. தீர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/56/OCTOBER/03/2022

### கழி வவுசர் கட்டணத்தை அதிகரிப்பதற்கான சபை அங்கீகாரம் பெறல்

1. ஹோட்டல்கள்
2. கிழக்கு பல்கலைக்கழகம்
3. கிரான் பகுதி
4. வாழைச்சேனை பகுதி

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ தவிசாளர் அவர்கள் தற்பொழுது எரிபொருள்விலை அதிகரிப்பினை கரித்தில் கொண்டு போக்குவரத்துச் செலவு உள்ளடங்கலாக மலசல கூடக் கழிவினை அகற்றுவதற்கான கட்டணம் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்

01. சுற்றுலா விடுதி – 25,000.00 ரூபாய்
02. கிழக்குப் பல்கலைக்கழகம் ~ 25,000.00ரூபாய்
03. கிரான் பிரதேசம் ~ 15,000.00ரூபாய்
04. வாழைச்சேனை பிரதேசம் ~ 10,000.00 ரூபாய்

அதனைத் தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அவர்கள் 15,000.00 ரூபாய் கட்டணமானது அதிகமான தொன்றாக காணப்படுவதாகவும் இதனை குறைத்து அறவீடு செய்யுமாறு தனது கருத்தினைப் பதிவு யெ்தார்.

அதனைத் தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள் பிரதேச சபை எல்லைக்குள் சமமான கட்டணத்தினை அறவீடு செய்யுமாறும் சுற்றுலா விடுதிகளுக்கு தங்களால் தீர்மானிக்கப்பட்ட தொகையினை அறவீடு செய்யலாம் எனவும் தனது கருத்தினை பதிவு செய்தார்

கௌரவ உறுப்பினர்களின் ஆலோசனைக்கு அமைவாக பின்வரும் கட்டணத்திருத்திருத்த ம் பரிந்துரை செய்யப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது

01. சுற்றுலா விடுதி – 25,000.00 ரூபாய்
02. கிழக்குப் பல்கலைக்கழகம் ~ 25,000.00ரூபாய்
03. கிரான் பிரதேசம் ~ 10,000.00ரூபாய்
04. வாழைச்சேனை பிரதேசம் ~ 10,000.00 ரூபாய்

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/56/OCTOBER /03/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ஆகியோர் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

## 04. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/56/OCTOBER/04/2022

### பிரதேசசபையிடமிருந்து மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மாற்றப்பட்ட "C" வகை சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை மீள பிரதேசசபைக்கு பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரம் பெறல்

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உப தவிசாளர்** திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/56/OCTOBER /04/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ஆகியோர் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

## 05. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/56/OCTOBER/05/2022

### PT செயற்திட்ட ஆரம்ப நிகழ்விற்கு சபையின் பங்களிப்புக்கான அங்கீகாரம் பெறல்

மேற்படி தீர்மானத்தினை கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் முன்மொழிந்ததுடன் இதனை கௌரவ உறுப்பினர் திரு. சண்முகம் கதிரவன் அவர்கள் வழிமொழிந்ததனை தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித் அவர்களும் கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்களுடன் கௌரவ

உறுப்பினர்களான், திரு.காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு.கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. கந்தசாமி பகீரதன், ˙, திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ,திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ,திருமதி. பொன்னையா கலைவாணி , ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, திரு. சுந்தரம் சுதர்சன், ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம்

திரு. சண்முகம் கதிரவன், ஆகிய 17 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் திரு. குணராசா குணசேகரன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் ஆகிய 03 கௌரவ உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர் அதனைத் தொடர்ந்து **KPPS/M.MEETING/56/OCTOBER/05/2022** இலக்க தீர்மானமானது 14 மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ஆகியோர் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

**அதனைத் தொடர்து முதியோர் தின நிகழ்வு கொண்டாடுவது தொடர்பான விடயத்தில் சபையிலுள்ள 23 கௌரவ உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு முதியவர்களை கௌரவிப்பதற்காக 5000.00 ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்குவது எனவும் சபையிலுள்ள மூத்த கௌரவ உறுப்பினர்களை கௌரவிப்பது எனவும் கௌரவ உறுப்பினர்களால்ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 56ஆவது சபை அமர்வானது காலை 10.10 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

.............................................
**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.